# பீஹாருக்கு ஏற்ற பிரசங்கி

உயர்ந்த மரம்
உதிர்ந்த பழம்
14

பீஹார் மாநிலம் சந்துவா பணித்தளத்தில், அனைத்து சபையினரும் மற்றும் ஊழியர்களும் ஒருங்கிணைந்து ஒழுங்குசெய்திருந்த கன்வென்ஷன் கூட்டங்களில் சகோதரர் அகஸ்டின் ஜெபக்குமார் செய்தியாளராக அழைக்கப்பட்டிருந்தார். ஜெம்ஸ் மீடியா துறை ஊழியர்களாகிய நாங்களும் சகோதரருடன் சென்றிருந்தோம். அங்கிருந்த ஓர் ஊழியரின் வீட்டில் சகோதரர் அகஸ்டின் ஜெபக்குமார் தங்கவைக்கப்பட்டிருந்தார். முதல் நாள் கூட்டம் சிறப்பாக நிறைவு பெற்றது. கூட்டம் முடிந்ததும், தங்குமிடத்திற்கு சகோதரர் புறப்பட்டபோது, சகோதரருடன் நானும் வாகனத்தில் சென்றேன். வாகனத்தை விட்டு இறங்கி சகோதரர் அறைக்குள் நுழைந்ததும், அவர் ஓய்வு எடுக்கட்டும் என்று அவரை விட்டு விட்டு உடனே கூட்டம் நடந்த மைதானத்திற்கு வந்து சேர்ந்தேன்.

மறுநாள் மே 3, எனது பிறந்த நாளான அன்று காலையிலேயே சகோதரரைச் சந்தித்து ஜெபித்துவரும்படி அவர் தங்கியிருந்த அறை நோக்கிச் சென்றேன். ஜெம்ஸ் ஊழியர் சகோதரர் விக்டர் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார் சகோதரர் அகஸ்டின் ஜெபக்குமார். அவர்களது சந்திப்பு முடியட்டுமே என்று அறைக்கு வெளியே காத்துக்கொண்டிருந்த என்னைக் கண்ட சகோதரர், "என்ன கிருபா, உள்ள வாங்க" என்று கூப்பிட்டார்; அறைக்குள் நுழைந்தேன், அண்ணன் இன்று எனது பிறந்த நாள் ஜெபிப்பதற்காக வந்தேன் என்று சொன்னவாறு, அவர் அமர்ந்திருந்த படுக்கைக்கு அருகே அவரது முழங்கால்களுக்கு முன்னால் முழங்கால் படியிட்டேன். சகோதரர் ஜெபித்து முடித்ததும், நான் எழுந்து சற்று நேரம் அறையனுள் அவரருகே நின்றுகொண்டிருந்தேன். அப்போது, அறையில் காற்றாடி ஓடாத நிலையில், வியர்வையுடன் சகோதரர் இருப்பதைக் கண்டு, அண்ணன், என்ன மின்சாரம் இல்லையா என்று நான் கேட்டதும், ஆமாம், என்று சகோதரரிடமிருந்து சாதாரணமாகப் பதில் வந்தது. நேற்று இரவு எப்படி தூ ங்கினீர்கள்? என்று நான் கேட்டபோது, பீஹார்ல அது பழகிப்போச்சு என்ற பதில் கிடைத்தது. சிறிய ஜெனரேட்டர் ஒன்று இருக்கிறது, அதனை கொண்டுவரட்டுமா என்று நான் கேட்டபோது, நீங்க எந்த ஜெனரேட்டர்ல தூங்குகிறீர்கள்? எனக்கு மட்டும் எதுக்கு ஜெனரேட்டர்? வேண்டாம் என்று மறுப்பு தெரிவித்த சகோதரர், தலையனை உரை சற்று வியர்வையாகிவிட்டது, அதை மட்டும் சற்று மாற்றினால் போதுமானது என்று விருப்பம் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து, உடன் ஊழியர் அந்தத் தலையணை உறையை உடனே மாற்றிக்கொடுத்தார்.

அவரது அறையை விட்டு வெளியே வந்த நான், சகோதரரிடம் மீண்டும் அனுமதி கோராமல், சிறிய ஜெனரேட்டரைக் கொண்டுவந்து, அப்போது சகோதரரது வாகன ஓட்டியாக வந்திருந்த சகோதரர் சுஷில் அவர்களிடம் கொடுத்து, சகோதரரின் அறைக்கு மின்சாரம் எப்பொழுதும் இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள் எனச் சொல்லிவிட்டு மைதானம் வந்து சேர்ந்தேன். தனிமையில் அவரது தன்மையைக் கண்ட நான் இவர் "பீஹாருக்கு ஏற்ற பிரசங்கி" என்பதை அறிந்துகொண்டேன்.